இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்)- 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 05

**STU5415–கல்வி முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

திகதி:- 18.12.2024

---

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை** எழுதுக.

## பகுதி I

1. கல்வியில் உள்வாரியான விளைதிறன் மற்றும் வெளிவாரியான விளைதிறன் என்பதனால் கருதப்படுவது யாது? எனச் சுருக்கமாக விளக்குக.
2. இலங்கை கல்வி முறைமையின் நிருவாகக் கட்டமைப்பினை விளக்குக.
3. வலயக் கல்வி அலுவலகத்தின் தொழிற்பாடுகள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக
4. "முகாமையாளர்கள் கொண்டுள்ள தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் திறன்கள் எந்தவொரு ஒழுங்கமைப்பினதும் வெற்றிக்கு முக்கியமானதாகும்." இக்கூற்றினைச் சுருக்கமாக விளக்குக.
5. வெற்றிகரமான முகாமைத்துவ செயன்முறையின் முக்கியமானதொரு படியாக மேற்பார்வை அமைகின்றது. மேற்பார்வை என்பதனால் கருதப்படுவது யாது?
6. நாடகமும் அரங்கியலும் அல்லது கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு முகாமைத்துவம் பற்றிய அறிவு எவ்வாறு முக்கியமானதாக அமைகின்றது.
7. முகாமைத்துவச் செயன்முறையில் இறுதி மற்றும் தொடர் மதிப்பீடுகள் எவ்வாறு முக்கியமானதாக அமைகின்றது.
8. கல்வித்துறைசார் முகாமையாளர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி வழங்குவதால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு வரைவிலக்கணத்தின் துணையுடன் "தலைமைத்துவம்" என்பதை விபரிக்குக. **(04 புள்ளிகள்)**

   ii. பாடசாலையொன்றின் தலைவர் என்ற வகையில் அதிபரின் வகிபாகத்தினை விபரிக்குக. **(08 புள்ளிகள்)**

   iii. ஒழுங்கமைப்பொன்றின் முகாமையாளர் கொண்டுள்ள **ஐந்து (05)** வகையான வலுவாண்மைகள் பற்றி உதாரணங்களுடன் கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

10. i. F.W. டெய்லர் என்பவரினால் அறிமுகம் செய்யப்பட்ட விஞ்ஞான முகாமைத்துவ செயன்முறையை விளக்குக. **(04 புள்ளிகள்)**

    ii. பாடசாலை முகாமைத்துவ செயன்முறையை சுமுகமாக நடைமுறைப்படுத்துவதற்கு விஞ்ஞான முகாமைத்துவச் செயன்முறை எவ்வாறு பங்களிப்புச் செய்யும் என விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை முகாமைத்துவத்தில் விஞ்ஞான முகாமைத்துவத்தினை ஒருங்கிணைத்துக் கொள்ளும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் **இரண்டு (02)** பற்றி கலந்துரையாடி அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

**11. i.** விளைதிறன்மிக்க பாடசாலையொன்றில் காணக்கூடிய **ஆறு (06)** பண்புகளைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**ii.** விளைதிறன்மிக்க பாடசாலையொன்றின் ஆளிடைசார் தொடர்புறவில் ஆசிரியரின் வகிபாகம் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என **இரண்டு (02)** உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

**iii.** "விளைதிறன்மிக்க பாடசாலையொன்று உயர் மட்டத்திலான வினைதிறனைக் கொண்டிருக்கும்" பாடசாலையொன்றின் வினைத்திறனை முன்னேற்றும் போது தோன்றக்கூடிய பிரச்சினைகள் **இரண்டினைக் (02)** குறிப்பிட்டு அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

**(06 புள்ளிகள்)**

**12. i.** இலங்கை அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் கல்வி முகாமைத்துவ செயன்முறையில் தாக்கம் செலுத்தும் விதம் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** கல்வி முறைமையின் பரவலாக்கம் காரணமாக தோன்றக்கூடிய பிரச்சினைகள் **இரண்டினைக் (02)** குறிப்பிட்டு அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் பாடசாலை முகாமைத்துவத்தினைப் பரவலாக்கம் செய்வதன் முக்கியத்தவத்தினை **இரண்டு (02)** விடயங்களின் துணையுடன் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** "பாடசாலை மட்டத்திலான மேற்பார்வை கல்வியின் தர ரீதியான அபிவிருத்தியில் முக்கியமான வகிபாகத்தினை வகிக்கின்றது." பாடசாலை மட்ட மேற்பார்வையின் முக்கியத்துவத்தினை விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** உங்களுடைய கற்பித்தல் கற்றல் செயன்முறையினை மேற்பார்வை செய்கையில் ஒரு உத்தியோகத்தர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் **ஆறினைப் (06)** பட்டியற்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

**iii.** வகுப்பறை மேற்பார்வை செயன்முறையினூடாக ஒரு நாடகமும் அரங்கியலும் அல்லது விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியர் பெற்றுக் கொள்ளக்கூடிய **இரண்டு (02)** நன்மைகளை உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -